(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 170.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஆகஸ்ட் 05, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

660/2025

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கையின் திரவப் பால் உற்பத்தி ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் உள்நாட்டு பால் தேவை, இறக்குமதி செய்யப்பட்ட பாலின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை ஆகிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) திரவப் பாலில் தன்னிறைவடைவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

985/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பயிற்சிகளை வழங்கியதன் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஈட்டிய வருமானம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வருமானம் ஈட்டப்படும் வழிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் பணியகத்தில் பயிற்சியைப் பெற்று வெளிநாடு சென்ற பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சியைப் பெறாமல் வெளிநாடு சென்ற பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) முதன்முறையாக வெளிநாடு செல்லும் ஒவ்வொரு பணியாளருக்கும் பணியகத்தின் மூலமான பயிற்சியை கட்டாயமாக்குவது முக்கியமானதாக அமைவதால், அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1634/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முப்படையினுள் நிரந்தர மற்றும் தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு இராணுவ சேவையிலிருந்து சட்டரீதியாக விலகுவதற்கு பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அப்பொது மன்னிப்புக் காலங்களில் சட்டரீதியாக இராணுவ சேவையிலிருந்து விலகிக்கொண்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2107/2026

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடவளவை தேசிய பூங்காவிற்கும் லுணுகம்வெஹெர தேசிய பூங்காவிற்கும் இடையில் உள்ள யானை வழித்தடம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி வழித்தடத்தின் இருமருங்கிலும் பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி மின்சார வேலியை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது;

(iv) யானை பாதுகாப்பு வேலியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு;

(v) 2018 ஆம் ஆண்டில் யானை பாதுகாப்பு வேலி இருக்கும் போதே அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த ஒரு யானை பாடசாலை மாணவரொருவரைக் கொன்றுள்ளதை அறிவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை வழித்தடத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் பலஹருவ கிராமம் உள்ளடங்கும் பகுதியில் பிரதான மின்சார வேலி தற்போது செயலிழந்துள்ளதென்பதை அறிவாரா?

(ii) மேற்படி மின்சார வேலியை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த முடிவு எடுக்கப்பட்ட திகதி மற்றும் அதன் நோக்கம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2135/2026

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம, மில்லெனிய மற்றும் ஹொரனை பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் தற்போது வரை வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) காணிபெறுநர்களின் பெயர்ப் பட்டியலொன்றை வழங்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவுக்குரிய காணிகளுள் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்டு வரும் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவிலும்;

(i) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு மற்றும் அதற்காக வருடாந்தம் அறவிடப்படும் குத்தகைக் கட்டணம்;

(ii) குத்தகை ஒப்பந்தம் காணப்படுகின்றபோதும் குத்தகைக் கட்டணம் அறவிடப்படாத காணிகளின் அளவு;

(iii) குத்தகைக்கு வழங்கக் கூடிய பிணக்கற்ற காணிகளின் அளவு;

வெவ்வேறாக யாதென்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2026 ஆகஸ்ட் 04),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(1) மற்றும் 41இ(1) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம், அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்திற்கமைய, 2026.02.05 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிகளும் கடமைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், சம்பளம் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2026.06.20 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அமப/26/1258/801/020 ஆம் இலக்க மற்றும் 2026.07.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு பின்வருமாறு சம்பளத்தைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களை குறித்த பதவிக்கு நியமித்த 2026.02.05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம், SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் (175,000-12x5,300-238,600) 5 ஆவது சம்பளப் படிநிலையில் நிறுவி, அதற்கமைய குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைவாக ரூபா 196,200/- அளவான சம்பளப் படிநிலைக்கு ஒத்ததாக, அட்டவணை III இற்கமைவாக பிரகாரம் ரூபா 170,528/- சம்பள படிநிலையில் நிறுவி சம்பளத்தைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களை செலுத்துவதற்கும் மற்றும் மேற்குறித்த சுற்றறிக்கையில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்பட்டு சம்பள மாற்றத்தை மேற்கொள்வதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*2.

விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*9.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

12.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

ரெட்ஸோ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை தேசிய புகைப்படக் கலைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.